ஒன்றிய பா.ஜ.க அரசு – துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

நாமக்கல் கிழக்கில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு

நாமக்கல், பிப். 12 –

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கான தலைமை மற்றும் முன்னிலை ஏற்போர் விவரங்களை அறிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு – நாமக்கல் ஒன்றியம்

இடம் : நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் – எம்.பி., மாவட்ட கழக செயலாளர்

முன்னிலை : இரா.வசந்தன் – வி.சி.க. மாவட்ட செயலாளர்

டாக்டர் பி.வி.செந்தில் – காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் மணிமாறன் – ஆதி தமிழர் பேரவை அன்புமணி – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மணிமாறன் – வி.சி.க. மண்டல செயலாளர் அல்ஹாஜ் கே.தவுலத்கான் – ஐக்கிய அமாத் அனைத்து பள்ளி & இஸ்லாமிய இயக்கம், மாவட்ட தலைவர் எஸ். அஹதுல்லா – த.மு.மு.க. மாவட்ட செயலாளர் பாரூக் – மக்கள் நீதி மையம், மாவட்ட செயலாளர்

கந்தசாமி – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.எம்.) புதுசத்திரம் தெற்கு & வடக்கு ஒன்றியம்

இடம் : புதுசத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : பெ.இராமலிங்கம் – எம்.எல்.ஏ., நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்

முன்னிலை : த.குமரவேல் – தமிழ் புலிகள் கட்சி, மாவட்ட செயலாளர்

சக்திவேல் – தமிழக வாழ்வுரிமை கட்சி, மாவட்ட செயலாளர்

மோகனூர் ஒன்றியம் & பேரூர்

இடம் : மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : முனவர் ஜான் – மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, துணைச் செயலாளர்

சேந்தமங்கலம் ஒன்றியம், சேந்தமங்கலம் & காளப்பநாயக்கன்பட்டி பேரூர்

இடம் : சேந்தமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : ப.இராணி – மாநில மகளிர் தொண்டரணி செயலாளர்

முன்னிலை :

சா.சேகர் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம்

ப.பிரபாகரன் – வி.சி.க. மாவட்ட செயலாளர்

முகமதுமுபீன் – இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

சுல்தான் பாஷா – மனிதநேய மக்கள் கட்சி, மாவட்ட தலைவர்

ஜெயபிரகாஷ் – மக்கள் நீதி மையம், கிழக்கு மாவட்ட செயலாளர்

கொல்லிமலை ஒன்றியம்

இடம் : கொல்லிமலை வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : கனிமொழி – தமிழ் நாடு பழங்குடியினர் நல வாரிய தலைவர்

எருமப்பட்டி ஒன்றியம் & பேரூர்

இடம் : எருமப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : ஜே.ரேகா பிரியதர்ஷினி – மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர்

இராசிபுரம் ஒன்றியம், நகரம், பட்டணம் & பிள்ளாநல்லூர் பேரூர்

இடம் : இராசிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : பார்.இளங்கோவன் – தீர்மானக்குழு துணைத்தலைவர்

முன்னிலை :A.P.செல்வராஜ் – கொ.ம.தே.க., வடக்கு மாவட்ட செயலாளர்

இரா.மகேந்திரன் – வி.சி.க. மாவட்ட செயலாளர்

ராவணன் – ஆதி தமிழர் கட்சி

நீலவேங்கை – ஆதி தமிழர் பேரவை, மாவட்ட தலைவர்

வெண்ணந்தூர் ஒன்றியம், வெண்ணந்தூர் & அத்தனூர் பேரூர்

இடம் : வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை : ஏ.கே.பாலச்சந்திரன் – மாவட்ட பொருளாளர்

முன்னிலை : வினோத் சேகுவேரா – தமிழ் புலிகள் கட்சி, மாவட்ட செயலாளர்

நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி & புதுப்பட்டி பேரூர்

இடம் : நாமகிரிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில்

தலைமை :நன்னியூர் ராஜேந்திரன் – மாநில நெசவாளர் அணி தலை

இந்த ஆர்ப்பாட்டத்தில் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த பகுதி தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஊராட்சி பொறுப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், பிரதிநிதிகள், BLA2, BLC, BDA மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு – துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

கிருஷ்ணகிரி கிழக்கு - மேற்கு மாவட்டங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஓய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, பிப். 12-

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து கழகத் தலைவரின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, நகர ,பேரூர் ஒன்றியங்களில் இன்று (12.02.2026 வியாழக் கிழமை) மாலை 04.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.

நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது, புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பாஜக வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ் நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அதிமுக வைக் கண்டித்தும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு மாவட்ட செயலாளர், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம்எல்ஏ அவர்கள் தலைமையிலும், பர்கூர் ஒன்றியங்கள் சார்பாக, ஒன்றிய அலுவலகம் முன்பு, மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் அவர்கள் தலைமையிலும்,

காவேரிப்பட்டினம் ஒன்றியங்கள் சார்பாக காவேரிப்பட்டினத்தில் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி தலைமையிலும், மத்தூர் ஒன்றியங்கள் சார்பாக, மத்தூரில் மாவட்ட பொருளாளர் தகதிரவன் அவர்கள் தலைமையிலும், ஊத்தங்கரை ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்டத் துணை செயலாளர் சந்திரன் அவர்கள் தலைமையிலும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் ஓசூர் மாநகரம், ராம்நகரில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமற்ற உறுப்பினருமான ஓய். பிரகாஷ் எம்எல்ஏ, மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோரது தலைமையிலும்,

வேப்பனபள்ளி ஒன்றியங்கள் சார்பாக வேப்பனபள்ளி ஒன்றிய அலுவலகம் முன்பு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட துணை செயலாளருமான முருகன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயரமன் ஆகியோரது தலைமையிலும் தளி ஒன்றியங்கள் சார்பாக, தளி ஒன்றிய அலுவலகம் முன்பு, மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் கிரீஷ் ஆகியோரது தலைமையிலும்,

சூளகிரி ஒன்றியங்கள் சார்பாக சூளகிரி ஒன்றிய அலுவலகம் அருகே மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாவட்டத் துணை செயலாளர் சின்னசாமி ஆகியோரது தலைமையிலும், கெலமங்கலம் ஒன்றியங்கள் சார்பாக, கெலமங்கலம் ஒன்றிய அலுவலகம் எதிரே மாவட்ட பொருளாளர் சுகுமாரன், தலை மைச் செயற்குழு உறுப்பினர் எல்லோரா மணி ஆகியோரது தலைமையிலும், பாகலூர் பேருந்து நிலையம் அருகே மாவட்டத் துணை செயலாளர் புஷ்பாசர் வேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் வீராரெட்டி ஆகியோரது தலைமையிலும் நடைபெற உள்ளது.

அது சமயம் மாநகர , நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும், கழக மூத்த முன்னோடிகள், பேரூராட்சி தலைவர்கள், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கலந்து கொள்ளும் இந்த கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினர், ஒன்றிய, மாநகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், தொ.மு.சா. நிர்வாகிகள், தோழர்கள், BLA 2, BLC, BDA மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்ப வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு கிழக்கு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ., மேற்கு மாவட்டச் செயலாளர் ஓய். பிரகாஷ் எம்.எல்.ஏ., அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு – துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, பிப்.12 –

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ் நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, நாகை மாவட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், இன்று (பிப்ரவரி 12 – வியாழக்கிழமை) மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இது குறித்து மாவட்டக் கழக செயலாளர் என். கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வும் துணை போகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள்வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்புதிட்ட நிதி ரூ.3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும், வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய

பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க. ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புறமக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்திஉள்ளது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு உறுதுணையாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க. கட்சி. ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க.வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ் நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி.மு.க.வைக் கண்டித்தும் நாகை மாவட்டதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் அளவில் திருமருகல் வடக்கு ஒன்றியத்தில் திருமுருகல் பேருந்து நிலையம் அருகே, திருமருகல் தெற்கு ஒன்றியம் திருக்கண்ண புரம் தபால் நிலையம் எதிரே, நாகை வடக்கு ஒன்றியம் ஆழியூர் பிரிவு சாலை, நாகை தெற்கு ஒன்றியம் பாப்பாகோயில் கடைதெரு, கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே, கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் தேவூர் கடை தெரு, கீழையூர் கிழக்கு ஒன்றியம் திருப்பூண்டி தபால் நிலையம் எதிரில்,கீழையூர் மேற்கு ஒன்றியம் திருக்கு வளை கடைத்தெரு, தலைஞாயிறு ஒன்றியம் நீர்முனை தபால் நிலையம் எதிரே, வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் தகட்டூர் தபால் நிலையம் எதிரில், வேதாரணியம் கிழக்கு ஒன்றியம் காரியாபட்டினம் கடைதெரு.வேதாரணியம் நகரம் ராஜாராஜாஜி பூங்கா எதிரில்,.நாகை நகரம் நாகை அவுரி திடல், நாகூர் நகரம் நாகூர் புதிய பேருந்து நிலையம், திட்டச்சேரி பேரூர் திட்டச் சேரி பேருந்து நிலையம், கீழ்வேளூர் பேரூர் கீழ்வேளூர் தபால் நிலையம் எதிரில், வேளாங்கண்ணி பேரூர் வேளாங்கண்ணி பேருந்து நிலையம், தலைஞாயிறு தலைஞாயிறு கடைத்தெரு ஆகிய இடங்களில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தலைமையிலும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் முன்னிலை யிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும்.

மேலும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், , கிளை வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள். இந்நாள்பிரதி நிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க.அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஆர்ப்பாட்டதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் செய்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் கூறியுள்ளார்..

ஒன்றிய பா.ஜ.க அரசு – துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து

திருப்பூர் தெற்கு மாவட்டப் பகுதிகளில் ஆர்ப்பாட்டம்!

மாவட்ட கழகப் பொறுப்பாளர் – கே.ஈஸ்வரசாமி எம்.பி. அறிவிப்பு!

திருப்பூர், பிப். 12 –

திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள் கவனத்திற்கு, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் இன்று (12.02.2026 – வியாழக்கிழமை) மாலை 03.00



மணியளவில் கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் " நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு பி.எஸ். தங்கராஜ் மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு செ.வேலுச்சாமி. உடுமலைப்பேட்டை நகர கழக செயலாளர் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு சா.ராஜமாணிக்கம், குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு எஸ்.என்.காணியப்பன், பொள்ளாச்சி தெற்கு வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க மற்றும் துணை போகும் அதிமுகவை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வருகின்ற 12.02.2026 வியாழக்கிழமை மாலை 03.00 மணியளவில் மேற்கொண்ட இடங்களில் நடைபெறுகிறது....

இந்நிகழ்வில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், நமது திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் , சார்பு அணிகளின் மாவட்ட,ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பி றப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டனம் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டும் என திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரப்பன் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க அரசு – துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

மயிலாடுதுறை, பிப்.12 -

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மயிலாடுதுறை மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், இன்று (பிப்ரவரி 12 - வியாழக்கிழமை) மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்டக் கழக செயலாளரும்,பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் ¬பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்க ணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வும் துணை போகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள்வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்புதிட்ட நிதி ரூ.3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும் வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க. ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம்எனகிராமப்புறமக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்திஉள்ளது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு உறுதுணையாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க. கட்சி. ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை

வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க.வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி.மு.க.வைக் கண்டித்தும் மயிலாடுதுறை மாவட்டதில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் அளவிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும். மேலும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் , இந்நாள் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க.அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஆர்ப்பாட்டதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் செய்திட வேண்டும். இதில் கூட்டணி கட்சியினர் கலந்து கொள்ள செய்திட வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

பெட்ரோல் மற்றும் டீசலை

ஜி.எஸ்.டி.யின் கீழ் கொண்டு வர ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளதா?

மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, பிப். 12 -

பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு,எரிவாயு துறை எரிபொருள் மீதான ஒட்டுமொத்த அதிகபட்ச வரிச்சுமைகள் காரணமாக நாள்தோறும் உயர்ந்து வரும் உற்பத்தி செலவுகள்,போக்குவரத்து செலவுகள்,அன்றாட வீட்டு வரவு செலவுகளை குறைக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

பெட்ரோல் மற்றும் டீசலை சீரான வரிவிதிப்பு,உள்ளீட்டு வரி வரவு சலுகைகளுடன் ஜி.எஸ்.டி.யின் கீழ் கொண்டு வர ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளதா?இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

நாட்டில் தூய்மையான ஆற்றல் சக்தி மாற்றம் மற்றும் தொழில்துறை போட்டிகளை சமாளிக்கவும் இயற்கை எரிவாயு,எல்.பி.ஜி,விமான டர்பைன் எரிபொருள் மீதான வரிகளை பகுத்தறிவு செய்ய ஏதேனும் திட்டங்களை ஒன்

றிய அரசு பரிசீலனையில் வைத்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

எரிசக்தி செலவுகளை குறைத்து நுகர்வோர் மற்றும் முக்கிய பொருளாதார துறைகளின் வருவாய் பரிசீலனைகளை சமன்படுத்த ஒன்றிய அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை அமைச்சர் சுரேஷ் கோபியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 70 வயது நிரம்பிய 500 மூத்தகுடிமக்கள் தம்பதியருக்கு சிறப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து நாகை நீலாயதாட்சியம்மன் கோவிலில் கீழ்வேளூர் ஒன்றியம் இலுப்பூர் ஊராட்சியைச் சேர்ந்த ஆர்.சுப்பையாபிள்ளை (வயது 100) அமராவதி (வயது 99) உள்ளிட்ட 6 மூத்த தம்பதியினருக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் புடவை வேட்டி, பழங்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழக செயலாளரும்,நகர் மன்ற தலைவர் இரா. மாரிமுத்து, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஏ.கணேசன், நாகை நகர கழக துணை செயலாளர் வெற்றிலை கடை சிவா உள்ளிட்டோர் உள்ளனர்.